**தலைப்பு 259 மாவட்ட செயலகம் - மாத்தளை**

**1. நிதிக்கூற்றுகள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மாத்தளை மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுவுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் செயலகத்திற்குரிய வருடார்ந்த விவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கபடுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தை தவிர, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாத்தளை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்று தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்படுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக்கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகமானது வருடார்ந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள்,

மற்றும் பொறுப்புகள் தொடர்பான முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கப்பூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கப்பூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற்கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னனியுடன்இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்கணும ˙போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாரான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்து கொள்வதற்கு போதுமான மற்றும்பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கப்பூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகள் கட்டுபாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களைநான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் அவசியம் இல்லாமையால் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது. மேலும் அக் காரணத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இவ் அறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்.

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு. | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|---|
| (அ) | முற்பணம் பெறுதல் ரூபா 37.48 மில்லியன் மற்றும் செலுத்தல் ரூபா 64.41 மில்லியன் என காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் சரியான மீதி முறையாக ரூபா 49 மில்லியன் மற்றும் ரூபா 73.2 மில்லியன் ஆகும். | மீதிகளை பரீட்ச்சித்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒதுக்கீட்டு கணக்குகள் தயாரிக்கும் போது எல்லைகளாக பணக்குறிப்புகள் மட்டும் கவனத்தில் கொள்ளப்படுவதுடன் கணக்குகள் முன்வைக்கப்படும் போதும் அவ் அமைப்பே பயன்படுத்தப்படுகிறது. |
| (ஆ) | மாதாந்த கணக்கு சுருக்கத்தின் படி வேறு பெறுவனவுகள் ரூபா 107.91 மில்லியன் ஆவதுடன், செயலாற்றல் கூற்றின் படி அது ரூபா 107.75 மில்லியன் ஆக காணப்பட்டது. | சரியாக வேறு வருமானங்கள் கணக்கிலிடப்பட்ட வேண்டும். | திறைசேரியின் அச்சுக் குறிப்பில் உள்ளடக்கப்படாத போக்குவரத்து திணைக்களத்தின் பொது வைப்பு கணக்கிற்கு தொடர்புடைய நிகர வருமானம் சீராக்கப்பட்டுள்ளது. |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு. | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|
| (அ) புதிய நிர்வாக வளாகங்கள் நிர்மாணம் தொடர்பாக மீளாய்வாண்டினுள் ஏற்கப்பட்ட ரூபா 107.81 மில்லியன், ஆன செய்யப்பட்டு வருகின்ற வேளை நிதி நிலைமைக் கூற்றில் கைவிடப்பட்டிருந்தது. | செய்யப்பட்டு வருகின்ற வேளைகளின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றினுள் வேறாக முன்வைக்கப்படுதல் வேண்டும். | நிதி நிலைமைக் கூற்று முன்வைக்கப்படும் போது தாமதம் ஏற்பட்டதுடன் சரி செய்யப்பட்ட பெறுமதி ரூபா 135,201,204 ஆகும். |
| (ஆ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு செலுத்தப்படாத ரூபா 27.38 மில்லியன் முற்பண மீதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 250/2016 இலக்க 2016 ஜூன் 09 திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கு வைக்கப்படல் வேண்டும். | கூலி மற்றும் வேளை முற்பண மீதி ரூபா 26,039,146 ஆகும். |

### 1.6.3 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்கு தொடர்பான இணக்க கூற்று.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள். | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|
| (அ) கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்ட இணக்க கூற்றின் பிரகாரம் 06 ஊழியர்களுக்கு தொடர்புடைய அறவீடு நிலுவையாக காணப்பட்ட முற்பண மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 308,280 ஆகும். அம் மீதிகள் 01 தொடக்கம் 17 வருடங்கள் வரையான பழைய மீதிகளாகியதுடன் அறவிடல் தொடர்பாக | 2004 ஒக்டோபர் 11 திகதிய 118 இலக்க தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் 1 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை பின்பற்றல் வேண்டும். | • 2009 மார்ச் 07 ஆம் திகதிக்கு ஓய்வு பெற்ற ஊழியர்களின் சகல நிலுவை பணமும் அறவிடப்பட்டுள்ளதென.<br>• சேவையை விட்டுச் சென்ற இரு ஊழியர்களில் ஒருவருக்காக ரூபா 59,465 தொகைக்காக வழக்கொன்று பரீட்சிக்கப்பட்டு வருவதுடன், எஞ்சிய ரூபா 33,320 பணம் அறவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென. |

| | | | |
|---|---|---|---|
| | பின் தொடரல் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது. | | • வேலை நிறுத்தம் செய்யப்பட்ட ஊழியர்களில் ஒருவருக்காக கணப்பட்ட ரூபா 178,102 தொகைக்காக வழக்கொன்று பரீட்ச்சிக்கப்பட்டு வருவதுடன், எஞ்சிய கடனாளியின் ரூபா 33,952 இல் ரூபா 7,454 மீதியொன்று மட்டும் கணப்படுகிறது எனவும். |
| (ஆ) | 07 ஊழியர்களின் தனிக் கடன் மீதி மற்றும் உறுப்பினர் கடன் பதிவேட்டின் படி கடன் மீதிகளுக்கிடையில் ரூபா 73,262 ஆன வேறுபாடு காணப்பட்டது. | மீதிகளை இணக்கம் செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஃஃ10 பதிவேடு திருத்தியமை மற்றும் வருங்காலத்தில் குறைப்பாடுகள் செய்யாத வண்ணம் ஊழியர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது என. |
| (இ) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு வீடுகள் இல்லாத கட்டிடங்களினுள் காணப்பட்ட ரூபா 487.38 மில்லியனான செய்யப்பட்டு வருகின்ற வேளை வேறுபடுத்தி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றினுள் வேறுபடுத்தி செய்யப்பட்டு வருகின்ற வேளை வெளிப்படுதல் வேண்டும். | நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படும் போது கால தாமதம் ஏற்பட்டுள்ளது எனவும், திருத்தப்பட்ட மீதி ரூபா 482,833,922 ஆகும் என. |
| (ஈ) | மாவட்ட செயலாளர் அலுவலக புத்தகங்களின் படி மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு செய்யப்பட்டு வருகின்ற வேளை பெறுமதி ரூபா 662.1 மில்லியன் ஆனதுடன் சிகாஸ் (CIGAS) நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக அது ரூபா 524.36 மில்லியனாக மற்றும் திறைசேரியின் அச்சுக் குறிப்புகளில் அது பூஜ்ஜியமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | செய்யப்பட்டு வருகின்ற வேளைகளின் ஒட்டுமொத்த பெறுமதி வருடார்ந்த நிதிக் கூற்றுக்களில் சரியாக முன்வைக்கப்படுதல் வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் முன்வைக்கப்படும் போது கால தாமதம் ஏற்பட்டுள்ளது என. |

### 1.6.4 கட்டு நிதி மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
| --- | --- | --- |
| முற்பண இணக்க கணக்கின் முற்பணம் 'பீ' கணக்கு என ரூபா 11 மில்லியன் மீதியொன்று இணக்கப்பட்டிருப்பினும் அம் மீதியின் துல்லியம் கணக்காய்வுக்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுமதிகள் சரியாக கணக்கிடப்பட்டு இணக்கம் செய்தல் வேண்டும். | அரச ஊழியர்களின் முற்பணம் பீ கணக்கின் முழு பெறுவனவுகளில் மாவட்ட செயலக அலுவலத்தின் பெறுவனவு குறைத்த பின்னர் எஞ்சியது வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்கள மீதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என. |

### 1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
| --- | --- | --- |
| (அ) **மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| கலேவல பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் நிதி பிரமாணம் 454(2) பிரகாரம் மின்சார உபகரணங்கள் தெபடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணம் 454(2) பிரகாரம் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். | நிகழ்காலத்தில் இப் பதிவேடு பேணப்படுகிறது என. |
| (ஆ) **அடியிதழ்சேர் புத்தக பதிவேடு** | | |
| வில்கமுவ பிரதேச செயலாளர் அலுவலத்தினால் நிதி பிரமாணம் 341 பிரகாரம் அடியிதழ் புத்தக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமானம் 341 ஏற்பாடுகளின் படி பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். | நிகழ்காலத்தில் அது நிதி பிரமாணத்தின்படி இற்றைப்படுத்தி பேணப்பட்டு வருகிறது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | **<u>நிர்வாக உத்தியோகத்தர்களுக்காக பெற்றுக்கொடுக்கப்பட்ட முற்பணம் தொடர்பான முற்பண பதிவேடு.</u>** | | |
| | 02 பிரதேச செயலாளர் அலுவலகங்களினூடாக அனைத்து முக்கிய தகவல்ளும் உள்ளடக்கப்பட்டு முற்பண பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முக்கியமான தகவல்கள் வெளிப்படுத்தப்படும் வகையில் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் வேண்டும். | அதில் காணப்பட்ட குறைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு இற்றைப்படுத்தி பேணுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. |
| (ஈ) | **<u>பெறுகை குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் வருகை பதிவேடு</u>** | | |
| | கலேவல பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் அரச பெறுகை வழிக்காட்டியின் 2.11.2 பிரகாரம் வருகை பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | அரச வழிக்காட்டியின் பிரகாரம் வருகை பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | வருங்காலத்தில் இப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என. |
| (உ) | **<u>ஏலம் அழைப்புதற்கான பதிவேடு</u>** | | |
| | கலேவல பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் அரச பெறுகை வழிக்காட்டியின் 5.2.1 பிரகாரம் ஏலம் அழைத்தலுக்கான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகை வழிக்காட்டியின் பிரகாரம் ஏலம் அழைத்தலுக்கான பதிவேடொன்று பேணப்படுதல் வேண்டும். | இவ் ஆண்டிலிருந்து பேணப்படுதல் வேண்டும் என ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. |
| (ஊ) | **<u>காசோலை வழங்கல் பதிவேடு</u>** | | |
| | லங்கல பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் நிதி பிரமாணம் 388 பிரகாரம் காசோலை வழங்குவதற்கான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 388 பிரகாரம் காசோலை வழங்கல் பதிவேடொன்று பேணப்படுதல் வேண்டும். | அது பேணப்படுதல் வேண்டுமென்று ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. |

(எ) **<u>கிராம சேவகர் குற்றச்சாட்டு தொடர்பான பதிவேடு</u>**

| | | |
|---|---|---|
| நாவுல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் கிராம சேவகர் குற்றச்சாட்டு தொடர்புடைய பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை | கிராம சேவகர் குற்றச்சாட்டு பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் வேண்டும். | தற்போது கோப்பு மற்றும் பதிவேடு தயாரிக்கப்பட்டு தொடர்புடைய பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இற்றைப்படுத்ததப்பட்டு பேனுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என. |

### 1.6.6 கணக்காய்வு சான்றுகள் முன்வைக்கப்படாமை.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|
| லங்கல பிரதேச செயலார் அலுவலகத்தில் வெளிகள ஊழியர்களுக்காக வழங்கப்பட்ட மோட்டர் சைக்கிள்/ ஸ்க்கூட்டருக்காக முழு காப்புறுதி பெறப்பட்டமை தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படவில்லை. | 2015 ஜூலை 07 திகதிய நிதி அமைச்சு பொது பணிப்பாளரின் BD/GPS/130/9/14/M-ii இலக்க ஆலோசனை கடிதம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இணையத்தினூடாக நிகழ்நிலை முறைமைக்கு பெறப்படுகின்ற வருவாய் உரிமை பத்திரம் பெறப்படும் போது முழு காப்புறுதி ஆய்வுக்கு உட்படாது என வெளிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் இதை கட்டுப்படுத்த திறனொன்று இல்லை என. |

### 1.6.7 <u>சட்ட விதிகள் பிரமாணங்களுடன் இணங்காமை.</u>

| கணக்காய்வு அவதானிப்புகள். | | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|---|
| **(அ)இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம்** | **இணங்காமை.** | | |
| (i) **நிதிப் பிரமாணம் 1645 (அ)** | மாவட்ட செயலாளர் அலுவலகம் மற்றும் லங்கல-பல்லேகம பிரதேச செயலாளர் அலுவலங்களில் வாகன லொங் புத்தகங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | லொங் புத்தகங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 ஆகஸ்து மாதத்தில் திருத்தப்பட்டுள்ளது என. |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ii)** | **நிதிப் பிரமாணம் 1646** | மாவட்ட செயலாளர் அலுவலகம் மற்றும் லங்கல-பல்லேகம பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் லங்கல-பல்லேகம பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் 2018 ஜுலை தொடக்கம் செத்தெம்பர் வரை இயக்க குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்கம் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | நிதி பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருங்காலத்தில் குறிக்கப்பட்ட திகதிக்கு முன்வைக்கப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. |
| (ஆ) | **<u>அரச நிர்வாக சுற்றறிக்கை</u>** | | | |
| **(i)** | **2002 ஜுன் 19 திகதிய 1/2002 இலக்க ஒருங்கினைந்த சேவை சுற்றறிக்கை** | நாவுல பிரதேச செயலாளர் அலுவலத்திற்கு இணைக்கப்பட்ட 62 ஊழியர்கள் 05 தொடக்கம் 26 வருடங்கள் வரையான காலப்பகுதி தொடர்ச்சியாக ஒரே இடத்தில் கடமையாற்றுகின்றனர். | சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக இடமாற்றல் முறைமையொன்று இல்லை எனவும் கிராம சேவகர் தொகுதிக்குள் இடமாற்றப்பட்டுள்ளனர் எனவும் மற்றைய ஊழியர்களின் தகவல்கள் இடமாற்றலுக்காக முன்வைக்கப்பட்டுள்ளது என. |

| | | | |
|---|---|---|---|
| (ii) **2013 ஜுன் 12 திகதிய HAF/01/01 இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை.** | 02 பிரதேச செயலாளர் அலுவகங்களின் 12 ஊழியர்கள் 06 தொடக்கம் 300 நாட்கள் வரை கால தாமதத்தின் பின்னர் எஞ்சிய வேலைத்திட்டங்களை முன்வைத்திருந்தனர். | சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிகழ்காலத்தில் குறைப்பாடுகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்க ஆலோசனை வழங்கப்பட்டது என. |
| (iii) **2016 திசெம்பர் 29 திகதிய 03/2016 இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி** | மாவட்ட செயலாளர் அலுவலகத்தினால் 02 தொடக்கம் 05 வரையான கால பகுதிக்குள் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருங்காலத்தில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. |
| (இ) **<u>அரச நிதிச் சுற்றறிக்கை</u>** | | | |
| **2016 மார்ச் 31 திகதிய 05/2016 இலக்க சுற்றறிக்கையின் 3.2.6 பந்தி** | லங்கல-பல்லேகம பிரதேச செயலாளர் அலுவலகத்தின் 2017 ஆம் ஆண்டின் பௌதீக பொருள் ஆய்வு அறிக்கை 2018 ஜுன் 15 திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கால தாமதம் ஏற்பட்டுள்ளது என ஏற்றுக்கொளளப்படுகின்றது என. |
| (ஈ) **<u>தேசிய வரவு செலவு சுற்றறிக்கை</u>** | | | |
| **(i) 01/2016 சனவரி 12 திகதிய 01/2016 இலக்க சுற்றறிக்கை** | | | |

| | | | |
|---|---|---|---|
| • **2.6 பந்தி** | கொடுப்பனவு முறையிலிருந்து அகற்றப்பட்ட கொடுப்பனவு பயனாளிகளின் கொடுப்பனவு பத்திரத்தை இரத்து செய்து பாதுகாப்பாக கோவைப்படுத்தப்பட்டு பேணுவதற்கு 02 பிரதேச செயலாளர் அலுவலகங்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றரிக்கையின் ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருங்காலத்தில் கொடுப்பனவு பயனாளிகள் மரித்ததன் பின்னர் அவ் அட்டை அலுவலத்திற்கு வழங்குமாறும், விலகுபவர்களின் கொடுப்பனவு சான்றிதழ்களை இரத்து செய்து கோவைப்படுத்தி வைப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என. |
| • **2.7 பந்தி** | இறத்தோட்ட பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் குடியிருப்பை விட்டு சென்ற அல்லது மரித்த 06 தொடக்கம் 08 மாதங்களிடையில் காலங்கடந்த கொடுப்பனவு பயனாளிகள் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றரிக்கையின் ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 1/368D/58 இலக்க கொடுப்பனவு பயனாளி கிராம சேவகருக்கு அறிவித்ததன் பின் ஜுலை மாதத்திலிருந்து பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது எனவும், 1/369/1 இலக்க கொடுப்பனவு பயனாளி மரித்தமை கிராம சேவகருக்கு அறிவித்ததன் பின்னர் மே மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது என. |
| • **2.14 பந்தி** | 02 பிரதேச செயலாளர் அலுவகத்தினால் 03 மாதங்கள் தொடர்ச்சியாக கொடுப்பனவு பெறப்படாத கொடுப்பனவு பயனாளிகளின் செலுத்தல்கள் பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றரிக்கையின் ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தபாற்கந்தோருக்கு அறிவுதல் செய்து வருங்காலத்தில் சரிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | **2015 ஜுலை 07 திகதிய BD/GPS/130/09/14/MC –ii இலக்க ஆலோசனை கடிதம்** | 04 பிரதேச செயலாளர் அலுவலகங்களில் வெளி களம் இல்லாத கடமைகளுக்காக விடுவிக்கப்பட்ட 42 ஊழியர்களுக்காக பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கள்களுக்காக ரூபா 5,861,940 அறவிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | **<u>கலேவல</u>**<br>பணம் செலுத்தப்படமாட்டாமெதனின் தற்காலிக விடுவித்தல் இரத்து செய்து கடமைக்கு மீண்டும் அழைத்தலுக்காக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது என.<br>**<u>லங்கல</u>**<br>வருங்காலத்தில் சம்பளத்தில் அறவிடப்படுவதற்கு அவர்களின் அலுவலக தலைவருக்கு தெரிவிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதென.<br>**<u>அபன்கக</u>**<br>சம்பளத்தில் ரூபா 58,500 அறவிடப்படுவதற்கும் 60 மாதாந்த தவணைகளில் இன்னுமொரு ஊழியரிடமிருந்து அறவிடுவதற்கான விண்ணப்பம் நிதி அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் எஞ்சிய கடனை அறவிடுவதற்கு வழக்கு தாக்கல் செய்யமுடியாது எனவும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) 2008 ஜுன் 13 திகதிய LD-1-34- (i) 2008 இலக்க காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரடைய மற்றும் காணி ஆணையாளர் நாயகத்தின் 01/2018 மற்றும் மார்ச் 28 திகதிய சுற்றரிக்கை. | 05 பிரதேச செயலாளர் தொகுதிகளின் 82 கிராம சேவகர்களினால் சுற்றரிக்கை ஆலோசனையின் படி 1,449 அறிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றரிக்கையின் ஆலோசனைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சரிசெய்ய நவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனவும். அனைத்து கிராம சேவகர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளனர் என. |
| (ஊ) 2010 ஒக்டோபர் 20 திகதிய 02/06/02/09/ (vii)-GSMB இலக்க சுற்றாடல் அமைச்சு செயலாளரின் கடிதம் | 03 பிரதேச செயலாளர் அலுவலகங்களில் மணல் சுரங்கம் ஆய்வு செய்தல்/ போக்குவரத்து உரிம கட்டணம், ரூபா 109,334 05 தொடக்கம் 187 நாட்கள் வரை கால தாமதத்தின் பின்னர் புவியியல் ஆராச்சி மையம் மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | மணல் சுரங்கம் ஆய்வு செய்தல்/ போக்குவரத்து கட்டணம் அடுத்த மாதத்தில் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும். | வருங்காலத்தில் குறிக்கப்பட்ட திகதிக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுள்ளது என. |

**1.6.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) அதிகாரம் அற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|---|
| (i) | இறத்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் முறையான அனுமதி இல்லாது 08 சந்தர்ப்பங்களின் போது முதியோர் கொடையாக ரூபா 182,400 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | முறையான அதிகாரத்துடன் கொடுப்பனவு செய்தல் வேண்டும். | இவ்வாறான கவனயீங்கள் ஆகாதவாறு கடமை செய்தல் வேண்டுமென்று ஆலோசனைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதென. |
| (ii) | திருப்த்திகரமாக வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதென தொழில்நுட்ப அதிகாரி உறுதி, கொடுப்பனவிற்காக பரிந்துரை மற்றும் அனுமதி இல்லாது மாத்தளை பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் 07 தொழில்களுக்காக ரூபா 1,718,520 செலுத்தப்பட்டிருந்தது. | நி.பி. 237 உறுப்புரை 1(அ) பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருங்காலத்தில் இக் குறைபாடுகள் தவிர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என. |

**(ஆ) அங்கிகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|
| (i) வில்கமுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் ரூபா 132,800 பெறுமதியான 600 மாங்காய் கன்றுகளுக்காக அனுமதியின்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | முறையான அனுமதியோடு கொடுப்பனவு செய்தல் வேண்டும். | 02 நிகழ்ச்சித்திட்டங்களின் 02 திட்டங்களுக்காக வேறு வேறாக இந்த கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என. |
| (ii) லங்கல-பல்கேம பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் ரூபா 411,500 தொகைக்கு பொருட்கள் பிரதேச செயலாளரின் அனுமதியின்றி பிரதிலாபிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | 2017 ஏப்ரல் 01 மற்றும் 5/4/RIDP/2017 இலக்க மாவட்ட செயலாளரின் கடிதத்தின் ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொடர்புடைய அனுமதி மற்றும் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்படாமை கால தாமதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டமை என. |

**(இ) சான்றுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|
| இறத்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்தினூடாக இற்றைப்படுத்தப்பட்ட செயல்பாடு சங்கப் பட்டியலில் உள்ளடக்கப்படாத 06 சங்கங்களுக்காக ரூபா 279,437 பெறுமதியான பொருட்கொடை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த செயலில் உள்ளதாக அடையாளப்படுத்தப்பட்ட சங்கத்திற்காக பொருட்களை பெற்றுக் கொடுத்தல் வேண்டும். | தொடர்புடைய சங்கம் பதிவு செய்யப்பட்ட மற்றும் செயற்படுகின்ற சங்கம் என. |

**(ஈ) மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|
| லங்கல-பல்லேகம பிரதேச செயலாளர் அலுவலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி ஊழியர்களாக மற்றும் மக்கள் பிரதிநிதியாக கடமையாற்றுகின்ற இரு ஊழியர்கள் இரு சந்தர்ப்பங்களின் கீழும் மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொண்டிருப்பினும் ரூபா 377,000 மீண்டும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேலதிமாக பெற்றுக் கொண்ட சைக்கிளுக்காக சந்தை பெறுமதி அறவிடப்பவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருங்காலத்தில் அவர்களுடைய சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென. |

**2. நிதிசார் மீளாய்வு.**

**2.1. செலவீன முகாமைத்துவம்.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள். | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை. |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 154.98 மில்லியன் ஆன நிதி ஏற்பாடு எஞ்சியதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பிடப்படும் போது முடியுமான வரையில் சரியாக செய்தல் வேண்டும். | எதிர்பாராத செலவு ஏற்படாததனால் நிதி ஏற்பாடு எஞ்சி காணப்படுகின்றது என. |

**2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள். | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை. |
|---|---|---|
| (அ) அமைச்சுக்கள் மற்றும் 47 திணைக்களங்களிலிருந்து பெறப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 2,105.89 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 35.1 மில்லியன் பயன்படுத்தப்படாமல் | எதிர்ப்பாக்கப்பட்ட நோக்கங்களுக்காக நிதியேற்பாடு பயன்படுத்த வேண்டியதுடன் எஞ்சிய நிதி ஏற்பாடு ஆண்டு இறுதியில் முதலாவதாக | தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்படாமையினால் இவ்வாறு நிதி ஏற்பாடு மீண்டும் மாற்றப்படல் |

| | | |
|---|---|---|
| மீண்டும் அனுப்பப்பட்டிருந்தது. அதற்கு மேலாக கூட்டுத்தொகை ரூபா 314.37 மில்லியன் நிதி ஏற்பாடு எஞ்சி காணப்பட்டது, மீளாய்வாண்டு இறுதியில் மீண்டும் மாற்றப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய நிறுவனத்திற்கு மீண்டும் மாற்றிக்கொடுத்தல் வேண்டும். | மேற்கொள்ளக்கட்டிருக்கிறது என மற்றும் நிதி ஏற்பாடு மாற்றப்படுவதற்கு தொடர்புடைய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருப்பினும் அது மீண்டும் மாற்றப்பட்டது என அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என. |
| (ஆ) 2015 ஆம் ஆண்டில் அபிவிருத்தி வேலைகளுக்காக வேறு அமைச்சு திணைக்களங்களிடமிருந்து பெறப்பட்டிருந்த ரூபா 320,814 தொடர்புடைய பணிகளுக்காக பயன்படுத்தாமல் அரசு வருவாக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி பணிகளுக்காக பணம் பயன்படுத்தப்பட வேண்டும். | தகவல் பெறப்பட்டு வருகிறது எனவும் வருங்காலத்தில் பதில்கள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. |

**2.3 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பணவு**

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ)4 பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் 39 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணம் 04 தொடக்கம் 200 நாட்கள் கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முற்பணத்தை செலுத்தலின் தாமதத்தை தடுப்பதற்கு ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என. |
| (ஆ) யடவத்த பிரதேச செயலாளர் அலுவலகத்தில் 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் 06 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 243,640 ஆன முற்பணங்களில் 61 தொடக்கம் 100 சதவீதம் வரை தொடர்புடைய பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் 1 தொடக்கம் 13 நாட்கள் வரை காலம் இடையில் நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது. | தேவைகளை அடையாளப்படுத்தி திட்டமிட்டு முற்பணம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திட்டமிடப்பட்டிருந்த திகதிக்கு நிகழ்ச்சி நடத்தப்படவில்லை எனவும் முற்பணம் ஈடுசெய்யப்படாமல் வவுச்சருக்கான கொடுப்பனவு காரணமாக அந்த முற்பணம் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது என. |
| (இ) உகுவெல பிரதேச | 2018 ஜுன் 03/2015 இலக்க | ஊழியர்கள் |

| | | |
|---|---|---|
| செயலாளர் அலுவலகத்தில் மூன்று ஊழியர்களுக்கு தொடர்புடைய பணிக்கு 04 நாட்களுக்கு முன்னர் கூட்டுத்தொகை ரூபா 47,500 முற்பணம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. | சுற்றரிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அறிவுறுத்தப்படுவார்கள் எனவும் முற்பண பதிவேட்டில் மற்றைய முக்கியமான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு இற்றைப்படுத்தப்படும் என. |
| (ஈ) அபன்ககங்கோரள செயலாளர் அலுவலகத்தில் மூன்று ஊழியர்களுக்கு 03 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த ரூபா 35,853 ஆன முற்பணம் 2018 நவம்பர் 29 திகதி வரையிலும் 15 தொடக்கம் 260 நாட்கள் இடையான காலம் தாமதமாகி இருப்பினும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஜுன் 03/2015 இலக்க சுற்றரிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருங்காலத்தில் குறிப்பிட்ட திகதிக்கு முற்பணம் தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என. |

## 2.4 வைப்பு மீதிகள்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) பொது வைப்பு கணக்கு மீதியுனுள் 1 தொடக்கம் 5 வருடங்கள் வரை தீர்க்கப்படாத மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,193,346 ஆகும் | நிதி பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணி இழப்பீடு 10 வருடங்கள் வரை நிறுத்தி வைக்கப்பட முடியும் என. |
| (ஆ) தம்புள்ளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் தொழில்களுக்காக 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வைப்பு ரூபா 533,424 தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிறுத்தி வைக்கப்பட்டுள்ளவை தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது என. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு.

### 3.1. திட்டமிடல்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நாவுல பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் செயற்பாடு திட்டத்தின் திட்ட கிளைக்கு தொடர்பாக வெறுமையான அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டிருப்பினும் திட்டமிடல் கிளையின் 48 ஊழியர்கள் வெளிகள நடவடிக்கைகளுக்காக உட்படுத்தப்பட்டிருந்தனர். | சுற்றரிக்கையின் படி செயற்பாட்டு திட்டமொன்று தயாரித்தல் வேண்டும். | கால தாமத்தினால் செயற்பாட்டுத் திட்டத்திற்கு உட்படுத்தப்படவில்லை என மற்றும் 110 செயற் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது என. |
| (ஆ) தம்புள்ளை பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் ரூபா 20 மில்லியனான 33 பணிகளுக்காக விரிவான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டி கோவையின் 4.2.1 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் அது தயாரிக்கப்படவில்லை என மற்றும் 2019 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என. |

### 3.2. கடமைகள் நிறைவேற்றப்படாமை.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கம்பெரெலிய விரைவான கிராம அபிவிருத்தி நிகழ்ச்சிக்காக உக்குவெல பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த ரூபா 45.82 மில்லியன் நிதி ஏற்பாடு அந்த செயற்த் திட்டத்திற்காக பயன்படுத்தப்படாமல் மாவட்ட செயலாளருக்கு மீண்டும் | எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயற் திட்டம் நடைமுறைப்படுவதை நிறுத்துவதற்கு பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டியின் அடிப்படையில் விடயநோக்கெல்லையிலி ருந்து வெளிவந்த காரணிகளின் அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| சுமத்தப்பட்டிருந்தது. | | பயன்படுத்தப்படாத நிதி ஏற்பாடு எனவும் அவை முறையாக சுமத்தப்பட்டுள்ளதென. |
| (ஆ) பொருள் மற்றும் சேவை வழங்கப்படாத போது லங்கல-பல்லேகம பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் பொருள் மற்றும் சேவை கொள்வனவிற்காக ரூபா 87,465 பெறுமதியான 03 காசோலைகள் எழுதப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | நிதி பிரமாணம் 137(2) மற்றும்(5), 215(1)(3) நி.பி.237 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விபரக்குறிப்புகளுக்கு அமைவாக வளங்கள் பெற்றுக் கொண்டதன் பின்னர் 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி மற்றும் 2019 மார்ச் 05 ஆம் திகதி காசோலை வெளியிடப்பட்டிருந்ததென. |
| (இ) தம்புள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்தில் காணி கையகப்படத்தல் நடவடிக்கைகள் தாமதமாகியதனால் ரூபா 13.49 மில்லியன் இழப்பீடு பொது வைப்பொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இழப்பீடு செலுத்தல் விரைவாக்கப்பட்டு தொடர்புடைய அபிவிருத்தி திட்டம் விரைவுப்படுத்தலுக்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இழப்பீடு உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளதுடன் வருங்காலத்தில் நீதி மன்றத்தில் வைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. |
| (ஈ) வேறு அமைச்சு திணைக்கள நிதி ஏற்றபாட்டில் கீழ் கிராம உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி விசேட நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் கம்பெரெலிய விரைவான கிராம வேலைத்திட்டத்திற்காக பெறப்பட்டிருந்த முறையாக ரூபா 53.31 மில்லியன் மற்றும் 151.61 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறப்படுகின்ற நிதி ஏற்பாடு ஆண்டினுள் கொடுப்பனவு அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காக பயன்படுத்தல் வேண்டும். | அரச கொள்கையுடனான தீர்மானம் அடிப்படையில் வேலைத் திட்டம் செயற்படுத்தல் நிறுத்தப்பட்டமையினால் எஞ்சிக் காணப்பட்டது எனவும் நிதி ஏற்பாடு மீண்டும் மாற்றப்பட்டள்ளது எனவும். |

### 3.3 <u>எதிர்ப்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை</u>

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றனன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வில்கமுவ பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட பொறுத்தக்கூடிய இரு மீள்பொருத்தும் நீர் சுத்திகரிப்பு அலகுகள் எதிர்ப்பார்க்கப்பட்ட கொள்ளளவில் இல்லாது வழங்கப்பட்டிருந்த போது அதற்காக ரூபா 702,000 | கோரப்பட்ட விபரக்குறிப்புகளுக்கு அமைய பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது என உறுதி செய்யப்படல் வேண்டும். | சுத்திகரிக்கப்பட்ட நீரின் அளவு 90 லீட்டர் என மாத்தளை மாவட்ட பொறியாளர் உறுதி செய்துள்ளார் எனவும் நீர் மூலக்கூறுகளின் கொள்வனவு மற்றும் |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டிருந்தது. | | நீரின் குணத்தின் மீது அது வேறுப்பட்ட முடியும் எனவும், கணக்காய்வு சந்தர்ப்பங்களில் அளவு குறைவதற்கு இக் காரணம் தாக்கப்பட்டிருக்கும் என விசுவாசிக்கப்படுகிறது என. |

**3.4 <u>பணம் விடுவிக்கப்படடடிருந்த போதும் செயன்முயன்னேற்றம் அடையப்படாத செயற்த்திட்டங்கள்.</u>**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) இறத்தோட்டை மாஉஸ்ஸாகொல்ல லாக்ஷா கிராமத்தின் பொது வசதிகள் மையத்தின் நிர்மாணத்திற்காக பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த ரூபா 4,895,250 ஆன நிதி ஏற்பாட்டில் ரூபா 1,386,325 செலவிடப்பட்டிருந்ததுடன் அளவு பத்திரத்தில் காணப்பட்ட 65 வேலை விடயங்களில் 12 மட்டும் நிறைவேற்றப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் பணிகள் உடன்படிக்கை தினத்திற்கு பூர்த்தி செய்யப்படுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரச கொள்கையுடனாக தீர்மானம் அடிப்படையில் செயற்திட்டம் ஆரம்பித்தல் நிறுத்துதல் காரணமாக எஞ்சி காணப்பட்டது எனவும், அந் நிதி ஏற்பாடு மீண்டும் கொடுக்கப்பட்டுள்ளது எனவும். |
| (ஆ) அலுகொல்ல மாளிகாதென்ன மற்றும் பிலிஹுடுகொல்ல கீழ் நீர் திட்டத்திற்காக கூட்டுத்தொகை ரூபா 684,483 நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபைக்கு விடுதலையாக்கப்பட்டிருந்தும் முன்மொழியப்பட்ட 32 குடும்பங்களுக்காக நீர் வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை காலத்திற்குள் பணி பூர்த்தி செய்யப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி இலக்கு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேணடும். | 2019 ஜுன் 18 ஆம் திகதிக்கு குறிக்கப்பட்ட 32 குடும்பங்களில் 27 குடும்பங்கள் நீர் வசதி பெற்றுக்கொண்டுள்ளது எனவும் எஞ்சிய 05 குடும்பங்களும் பொருளாதார பிரச்சினைகளால் இன்னும் நீர் வசதி பெறப்படவில்லை என. |
| (இ) மாத்தளை பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் கம்பெரெலிய திட்டத்தின் கீழ் ரூபா 376,740 இலங்கை மின்சார சபைக்கு செலுத்தப்பட்டிருப்பினும் 13 பிரதிலாப குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்படடிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி இலக்கை அடையும் போது சரியான கவனத்தோடு பிரதிலாபிகளை தெரிந்துகொள்ள வேண்டும். | மிக விரைவாக மின்சாரம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என. |
| (ஈ) நாவுல கரணமுலயாய மாதிரி கிராமத்தின் 63 குடும்பங்களுக்காக மின்சாரம் பெற்றுக்கொடுப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு 2018 | எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டியதுடன் | தற்போது டிரான்ஸ்போமர் பொருத்த குழிகள் வெட்டப்பட்டு மின்சார தூண்கள் மாதிரி |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டில் திசெம்பர் மாதம் ரூபா 4,680,778 செலுத்தப்பட்டிருப்பினும் அது தொடர்பான முதன்மை வேலைகளை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | தாமதமாக்கல் தொடர்பாக எஞ்சிய நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | கிராமங்களுக்கு கொண்டு சென்று பொருத்தப்பட்டுள்ளது என மற்றும் டிரான்ஸ்போமர் பொருத்தப்பட்டுள்ளது என. |

**3.5 பெறுகைகள்.**

--------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளக்கட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்.** | **பரிந்துரை.** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை.** |
|---|---|---|
| (அ) 03 பிரதேச செயலாளர் அலுவகங்களினால் போதுமான நிதி சக்தி இல்லாத 21 சங்கங்களுக்காக ரூபா 10.44 மில்லியன் பெறுமதியான 21 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. | பெறுகை வழிக்காட்டியுடன் பரிசோதிப்பதற்காக பெறுகை கையேட்டிற்கு வெளியிடப்பட்ட மேலதிக இலக்க 12 இல் 3.9.1 வழிக்காட்டியிற்கு ஏற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பூரண செயல்பாடு தொடர்பாக கவனத்தில் கொண்டு பின்னர் ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டும் எனவும். எதிர்காலத்தில் இது தொடர்பாக விசேடமாக கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என. |
| (ஆ) மாவட்ட செயலாளர் அலுவலகத்தினால் அமைச்சின் செயலாளரின் அனுமதி இல்லாமல் வாகனமொன்று மேம்படுத்துவதற்காக ரூபா 449,397 செலவிடப்பட்டிருந்தது. | பெறுகை வழிக்காட்டி கோவையின் 9.3.1 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்கள பெறுகை சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது என. |
| (இ) மாவட்ட செயலாளர் அலுவலகம் மற்றும் அபன் ககோரள பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் வாகன மேம்படுத்தல் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் விலைக் கோரப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் 2.14.1 மற்றும் 3.4 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதிவு செய்யப்பட்ட 05 வழங்குனர்களுக்கும் குறைவான அளவு பதிவுசெய்யப்பட்டிருத்தல், பெறுகை வழிகாட்டியின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. |
| (ஈ) தம்புள்ள பிரதேச செயலாளர் அலுவலகம் ரூபா 20,000 தொடக்கம் ரூபா 4,500,000 வரையான விச்சுக்குள்ளான 33 பெறுகைகள் தொடர்பாக தேசிய சந்தை விலை முறை பின்பற்றப்பட்டிருந்தது. | பெறுகை வழிக்காட்டி கைப்புத்தகத்தின் 2.14.1 பிரகாரம் எடுத்தல் வேண்டும். | பிரதேச பெறுகையின் குழுவின் அதிகார வல்லமையின் எல்லை மீறப்படல் மற்றும் கால தாமதத்தினால் மாவட்ட பெறுகை குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது என. |

**3.6. சொத்து முகாமைத்துவம்.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) லங்கல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெறுமதி வெளிப்படுத்தப்படாத 02 இயந்திரங்கள் மற்றும் ரூபா 134,000 பெறுமதியான இயந்திரம் 17 அலுவலக உபகரணங்கள் பயன்படுத்தாது மற்றும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | சொத்து பயன்பாட்டிற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டியதுடன் அவ்வாறு முடியாத போது அகற்றுவற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 15 மேசைகள் களஞ்சியசாலையில் உள்ளது எனவும், மின்விசிறி மற்றும் உயர் அமுக்க நீர் காற்றமுக்க விசைக்குழாய் பயன்படுத்தப்பட்டது எனவும் மற்றைய இயந்திரம் தேவையுடைய அரச நிறுவனத்திற்கு எதிர்காலத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) 04 பிரதேச செயலாளர் அலுவலகங்களின் 94 விடயங்களின் 209 பொருள் அலகுகளுக்கும் மேற்பட்ட எண்ணிக்கை மீளாய்வாண்டிள் அகற்றப்பட்டிருப்பினும் அது தொடர்பாக நிதி கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | அகற்றல் நடைமுறை சொத்து பாய்ச்சல் அறிக்கைக்கு சீராக்கப்படல் வேண்டும். | 2019 ஒதுக்கீடு கணக்கில் சீராக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என. |

**3.7 அரச ஊழியர்களின் பிணை வைப்பு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 04 பிரதேச செயலாளர் அலுவலகங்களில் 23 ஊழியர்களினால் ரூபா 61,000 ஆக பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணம் 880 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தொடர்புடைய ஊழியர்களிடம் தவணைகளாக பிணை பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தயவுடன் தெரிவிக்கின்றேன். |

## 3.8 நட்டங்களும் சேதங்களும்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன .

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் 2016 ஒக்டோபர் 25 ஆம் திகதி காணாமல் போன கணினிக்காக ரூபா 81,250 தொடர்புடைய ஊழியரிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மாணிக்கப்பட்டிருப்பினும் அதில் ரூபா 40,625 புத்தகத்திலிருந்து அகற்றுதற்கு பின்னர் தீர்மாணிக்கப்பட்டிருந்தது. | பரிசோதனை சபையின் தீர்மானம் வேறுபடுவதற்கு காரணங்கள் காட்டப்பட்டு அதற்காக முறையான அனுமதியொன்று பெற்றுக்கொள்ளல் வேண்டும். | மாவட்ட செயலாளரின் கடிதத்தினூடாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டு ஊழியர் அறிவுருத்தப்பட்டுள்ளார் என. |
| (ஆ)யடவத்த பிரதேச செயலாளர் அலுவலகத்தில் 2016 மே 20 ஆம் திகதி காணாமல் போன ரூபா 56,000 கிரய டெப் கணினிக்காக ரூபா 70,000 ஊழியரிடமிருந்து அறவிடுவதற்கு முன்னர் தீர்மாணிக்கப்பட்டிருப்பினும் கிரய பெறுமதி புத்தகத்திலிருந்து நீக்கப்படுவதற்கு பின்னர் தீர்மாணிக்கப்பட்டிருந்தது. | பரிசோதனை சபையின் தீர்மானம் வேறுபடுவதற்கு காரணங்கள் காட்டப்பட்டு அதற்காக முறையான அனுமதியொன்று பெற்றுக்கொள்ளல் வேண்டும. | ஊழியரின் அறவிடல் தகுதியற்றது என அடையாளப்படுத்தப்பட்ட பின்னர் நீக்குவதற்கான கட்டளை விதிக்கப்படும் என. |

## 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்ட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாவுல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் 50 ஏக்கர் பாதை மற்றும் கிளை சாலைகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் நிறைவேற்றப்படாத வேளைக்காக ரூபா 68,590 செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிக செலுத்தல்கள் மீண்டும் அறவிடல் மற்றும் பொறுப்பு கூற வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | மீண்டும் பரசோதனை செய்வதற்கு 2019 ஜுலை 30 திகதி கணக்காய்வு முகாமைத்துவ கூட்டத்தின் போது தீமாணிக்கப்பட்டதனால் அவ் அறிக்கை பெற்றுக் கொள்ள குறித்துக் கொள்கிறேன். |

### 3.10 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு வினா தொடர்பான தகவல்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 4 பிரதேச செயலாளர் அலுவலகத்தினூடாக 37 அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக காணி கையகப்படுத்தப்படும் போது 1 தொடக்கம் 43 வருடங்கள் வரை காலம் கடந்து இருப்பினும் அக் கையப்படுத்தலின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி கையகப்படுத்தல் நடவடிக்கைகள் விரைவுப்படுத்தல் வேண்டும் | பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் நடவடிக்கைகள எடுக்கப்பட்டு வருகிறது என. |
| (ஆ) யடவத்த பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் ஒரே சங்கம் அல்லது 8 நிறுவனங்களுக்காக 19 சந்தர்ப்பங்களில் ரூபா 349,000 ஆக பிரதிலாபம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | பொருட்கள் அல்லது உபகரணங்கள் பிரதிலாபிகள் இடையில் நியாயமாக பகிரப்படும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் அவ்வாறு நடக்காத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட குறிக்கப்பட்டுள்ளது என. |
| (இ) லக்கல-பல்லேகம பிரதேச செயலாளர் அலுவகத்திற்கு சொந்தமான வாகனமொன்று ரூபா 98,825 செலவிடப்பட்டு மேம்படுத்தப்பட்டிருப்பினும் அதற்கு தொடர்பாக விலை கோரல் கோரப்பட்டிருக்கவில்லை. | அரச நிர்வாக சுற்றறிக்கை 30/2016 பிரகாரம் விலை கோரப்பட்டு மேம்படுத்தப்படல் வேண்டும் | 30/2016 அரச நிர்வாக சுற்றிக்கைக்கு அமைவாக விலை கோரல் தேவைப்பாடு இல்லை என. |
| (ஈ) அரச நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 02 பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு சொந்தமான அரசின் 21 காணி துண்டுகள் தொடர்பாக 12 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் கடந்திருப்பினும் முறையாக மாற்றப்பட்டிருக்கவில்லை. | காணி தொடர்பான கற்பணைகளுக்கு அமைவாக முறையாக மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்ாக காணி மதிப்பீடு மற்றும் அளவிடும் நிறுவனத்திற்கு மீண்டும் நினைவுபடுத்த தீர்மாணிக்கப்பட்டுள்ளது என. |
| (உ) கலேவல பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் அபிவிருத்தி திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 445,873 பெறுமதியான 150 பொருள் அலகுகள் 2019 பெப்ரவரி 12 ஆம் திகதி வரையிலும் பயனற்றிருந்தது. | பொருட்கள் முறையாக தொடர்புடைய அபிவிருத்தி செயற்றிட்டத்திறாகாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அமானோ தகடு மற்றும் கையுடைய பிளாஸ்டிக் கதிரைகள் தொடர்புடைய சங்கத்திற்கு பகிரப்பட்டுள்ளது என மற்றும் பிவிசி நீர் செயற்றிட்டம் பூர்த்தி செய்யும் வரையில் பிரதேச செயலாளர் |

| | | |
|---|---|---|
| | | அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என |
| (ஊ) வினைதிறன் தடைதாண்டல் சித்தியடைந்த 17 ஊழியர்களின் பணி உறுதி செய்வதற்கு அம்பன் கங்க கோரல பிரதேச செயலாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தகுதிகள் பூரணப்படுத்தியுள்ள ஊழியர்களை பணியை உறுதியசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தனிப்பட்ட கோவைகளின் குறைபாடுகளினால் வேலைகளை உறுதி செய்வதற்கு இறுதிவரையில் முடியாது போனது என மற்றும் வேலையை உறுதி செய்வதற்காக 8 ஊழியர்களினால் தனிப்பட்ட கோவைகள் மாவட்ட செயலாளருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. |

**4. நிலை பேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐரோப்பிய ஒன்றியத்தின் 2030 நியாய பத்திரத்திற்கு அமைவாக நிலையான அபிவிருத்தி நோக்கங்களுக்கு தொடர்பான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஐரோப்பிய ஒன்றியத்தின் 2030 நிலையான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதன் நோக்கத்தில் திட்டம் தயாரிக்க வேண்டும். | விரைவாக சரிசெய்ய குறிக்கப்பட்டுள்ளது என. |

**5. மனித வள முகாமைத்துவம்.**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 09 பிரதேச செயலாளர் அலுவலகங்களில் 75 பதவிகளுக்கு தொடர்பாக 170 ஊழியர்களின் பதவி வெற்றிடம் பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை பூரணப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டுபாட்டிற்கு வெளியே வெவ்வேறு காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டமையால் இவ்வாறு நடக்கிறது எனவும் புதிய இணைத்தலுடன் அதற்காக பதில்கள் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்படுகிறது என. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கலேவல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் 180 ஊழியர்களுக்காக எந்தவொரு பயிற்ச்சிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர்களை பயிற்ச்சியளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருங்காலத்தில் அத் தேவையின் படி நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என. |
| (இ) | லங்கல-பல்லேகம பிரதேச செயலாளர் அலுவலகத்தில் மத்திய அரசின் வெவ்வேறு நிறுவனங்களுக்காக இணைக்கப்பட வேண்டிய 49 ஊழியர்களின் வெற்றிடம் காணப்பட்டது. | வெற்றிடங்களை பூரணமாக்குவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புதிய இணைத்தலுடன் அதற்காக தீர்வுகள் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என |
| (ஈ) | 02 பிரதேச செயலாளர் அலுவலகங்களில் 10 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 40 கிராம சேவகர் பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டிருந்தனர். | வெற்றிடங்களை பூரணமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஊழியர்களின் பற்றாக்குறைக்கான தீர்வாக புதிதாக இணைக்கப்படுகின்றவர்கள் இணைக்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது என. |
| (உ) | 05 பிரதேச செயலாளர் அலுவலகளில் 12 ஊழியர்கள் மேலதிகமாக உள்ளனர் என அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்கள் உள்ள அலுவலகங்களுக்காக அதிகமாகவுள்ள ஊழியர்கள் இணைக்கப்பட வேண்டும். | நடைமுறையில் வேறு பணிகளின் பற்றாக்குறை அவ் பெயரளவு மேலதிக பணிகள் ஏற்கின்ற நபர்களிடமிருந்து நிரப்பிக்கொள்ளப்படும் என. |